T-UN-502

வெளியீடு 5

# உடுப்பது - நான்கு முழம்

(அரசாங்கத்தில் பரிசு பெற்ற வெளியீடு)

தென்னிந்திய
முதியோர் கல்விக் கூட்டுறவுப்
பதிப்பகம் லிமிடெட்,

99, கிடங்கு தெரு :: சென்னை 1.

போன்: 3879.

# உடுப்பது - நான்கு முழம்

ஆசிரியர் :
மு. அருணாசலம்

(அரசாங்கத்தில் பரிசு பெற்ற வெளியீடு)

தென்னிந்திய
முதியோர் கல்விக் கூட்டுறவுப்
பதிப்பகம் லிமிடெட்,
99, கிடங்கு தெரு :: சென்னை 1.

முதற் பதிப்பு - 1949

விலை 2 அணா

# முன்னுரை

படிக்கத் தெரியாதவர் முகத்தில் இரு புண் உடைவர் என்று திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சொன்னது இன்றும் உண்மை. உலகம் மாறி வரும் இக்காலத்தில் படியாதார் குருடர்போல் அல்லல் படுகின்றனர்.

சுதந்தரம் பெற்ற நம் நாட்டு மக்களை இக்கதியிலிருந்து மீட்கவே முதியோர் கல்வி இயக்கம் அரசாங்கத்தாரால் தொடங்கப்பட்டிருக்கிறது. நாற்பது நாட்களில் தமிழ் படிக்கக் கற்கலாம். அப்படிக் கற்றதும் படித்துப் பழக இந்தப் புத்தகம் பயன்படும். இது எளிய நடையில் எழுதப்பட்ட சிறு புத்தகம். சிறந்த கருத்துகள் கொண்டது. இதைப்போல் பல வெளிவந்திருக்கின்றன. இவை அரசாங்கத்தில் பரிசு பெற்றவை. இவைகளை ஒன்று விடாமல் எளிதில் படித்து முடிக்கலாம். அவ்வாறு படித்தால் புதிதாகப் பெற்ற எழுத்தறிவு நிலைக்கும்; மக்களின் சுதந்தரம் உண்மைபெறும்.

புகழ் பெற்ற தமிழ் மக்கள், ஒவ்வொருவரும் முகத்திரண்டு கண்ணுடையர் ஆக, இந்த இயக்கத்தில் முந்திக் கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

இந்த வெளியீடுகளுக்காக திருவாவடுதுறை ஆதீனம் நன்கொடை அளித்ததைப் பாராட்டுகிறேன். மறறவர்களும் இதைப் பின்பற்றுவார்களென நம்புகிறேன்.

சென்னை,
27—9—1949

K. மாதவ மேனன்,
கல்வி மந்திரி.


[ திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 20-வது மகா சந்நிதானம் அவர்களாகிய ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண பண்டாரச் சன்னதி அவர்கள், முதியோர் கல்வி வளர்ச்சி விஷயத்தில் திருவுளம் கூர்ந்து அனுப்பி வைத்த வாழ்த்துச் செய்தி ]

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்"

*மனிதன் உலக விஷயங்களை உணர அகக்கண் புறக்கண் இரண்டும் பெற்றிருத்தல் வேண்டும். புறக் கண்ணால் கண் முன் தோன்றுவதை மட்டிலுமே காண முடியும். ஆனால் அகக்கண்ணே, கண்ணால் காணாததையும் காணும் இயல்புடையது. இம்மையோடு மட்டுமின்றி மறுமைக்குள்ள முறையான பாதையையும் அகக்கண்ணால்தான் காணமுடியும். அகக்கண்ணைத் திறந்து ஒளி பெறச் செய்வது கல்வி. நம் நாட்டிலும் பெரும்பாலோர் கல்வி பெற முடியாமல் போய் விட்டது. அவர்களது வாழ்வை விளக்காமல் அவர்களும் அகக்கண் ஒளி பெற* **தென் இந்திய முதியோர் கல்விக் கூட்டுறவு பதிப்பகத்தினர்** *அரும்பாடு படுகின்றனர். பாராட்டத் தக்க உழைப்பு. உழைப்பு வெற்றிபெற இறைவன் அருள் புரிவாராக.*


**மகா சந்நிதானம் அவர்கள் உத்திரவுப்படி,**

**சுப்புக்குட்டித் தம்பிரான்**



திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
20-வது மகா சந்நிதானம் அவர்களாகிய ஸ்ரீலஸ்ரீ
அம்பலவாண பண்டாரச் சன்னதி அவர்கள்.

புதிதாக எழுத்தறிவு பெற்ற தமிழ் மக்களுக்கு எழுதிய இந்த வெளியீடுகள், அரசாங்கத்தில் பரிசு பெற்றவை. இவைகளுக்கு அரசாங்கமும், திருவாவடுதுறை ஆதீனமும் தக்க பொருளுதவி செய்து, தென்னிந்திய முதியோர் கல்விக் கூட்டுறவுப் பதிப்பகத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. தமிழகத்தின் முதியோர் கல்வி இயக்கத்தின் அடிப்படையான எழுத்தறிவூட்டும் இயக்கத்தில் அக்கரை கொண்ட தமிழர்கள், இவ்வியக்கத்தை நீடூழி நடத்த பேராதரவு அளிப்பார்கள் என்று நம்புகிறோம்.



அண்ணல் காந்தியடிகள்

# உடுப்பது — நான்கு முழம்

நாம் வாழும் நாடு தமிழ் நாடு. இந்த நாட்டில் சூரிய வெப்பம் அதிகம். நாம் உடுக்க, நான்கு முழத் துணி போதுமானது. அனேகர் நான்கு முழ வேட்டிதான் கட்டுகிறார்கள். வைதிகரான பெரியோர் சிலர் எட்டு முழமும் கட்டுவார்கள், பத்து முழமும் கட்டுவார்கள். பெண்கள் உடுத்தும் சேலை இன்னும் அதிக நீளம் உடையது.

ஆயினும், தமிழ் நாட்டில் ஆண் பிள்ளைகள் உடுத்தும் உடை இன்னும் குறைவானது. ஏழை மக்கள் முழங் கால் வரையில்கூடத் துணி உடுத்துவ

தில்லை. பலர் கோவணம் ஒன்று மட்டுமே கட்டுகிறார்கள்.

முன்னமே, காந்தியடிகள், இடுப்பில் எட்டு முழ வேட்டி, மேலே நீண்ட சட்டை, அதன் மேல் ஓர் மேல்வேட்டி, தலையில் மிகவும் நீண்ட துணியாலான தலைப்பாகை ஆகிய உடை அணிந்து வந்தார். ஒரு சமயம் அவர் தமிழ் நாட்டுக்கு வந்தார். நம் மக்களின் பரிதாப நிலையை பார்த்தார். தாம் அணிந்த உடை ஆடம்பரம் என்று எண்ணினார். அன்று முதல் சட்டையை யெல்லாம் நீக்கினார். தம் வேட்டியையும் முழங்கால் அளவுக்குக் குறைத்துக் கொண்டார்.

மக்கள் வாழ்வதற்கு அவசியமானவை மூன்று: அவை உணவு, உடை, இருப்பிடம் என்பன. ஆதிகாலத்தில் அவை இயற்கையாகவே

கிடைத்தன. ஆனால் இக்காலத்தில் அவற்றை மனிதர் முயன்று செய்து கொள்ள வேண்டியிருக்கிறது.

## உடை

இந்த மூன்றில் ஒன்றான உடையின் கதை விசித்திரமானது. கடவுள் படைப்பில், ஆடு மாடு பறவைபோல, மனிதனும் ஒரு பிராணி. ஆனால், மற்ற பிராணிகளுக்கு இயற்கையாகவே உடை உண்டு; மனிதனுக்குத் தான் இல்லை. தடித்த தோலும், அதன் மேல் அடர்ந்த ரோமமும் ஆட்டுக்குக் கடவுள் கொடுத்திருக்கிறார். இவை ஆட்டின் உடை, மாட்டுக்கும் இப்படியே. காக்கை குருவிகளுக்கு கனத்த இறகு உண்டு. இதுவே அவற்றின் உடை.

மனிதன் மட்டுமே உடையில்லாமல் பிறந்தவன். அவன் உடம்பு

வெயில், காற்று, மழை, குளிர் முதலிய வற்ருல் துன்பப்படும். ஆகவே, துன்பப்படாதபடி உடலைக் காக்க, மனிதனுக்கு உடை வேண்டியிருக்கிறது. இந்த உடையை மனிதன் தானே செய்து கொள்ளவேண்டும்.

ஆதிகால மனிதர் தழையால் உடலை மூடி வந்தார்கள். அகன்ற இலைகளைச் சேர்த்துத் தைத்தும், தழைகளைக் கோத்தும் ஆடையாக அணிந்தார்கள். சிலவித மரப் பட்டையை உரித்து அதையும் அணிந்தார்கள். இதுதான் மரவுரி என்பது. காட்டில் தவம் செய்த முனிவரும் மற்றவர்களும் மரவுரி அணிந்தார்கள். தந்தை சொற்படி காட்டுக்கு புறப்பட்ட இராமனும், சீதையும், இலட்சுமணனும் மரவுரி அணிந்து புறப்பட்டார்கள்.

நம் நாட்டில், மத்திய மாகாணத்தில் வர்தா என்ற நகரம் இருக்கிறது. கையால் செய்த பொருள்களைத் திரட்டி அங்கு ஒரு பொருட்காட்சி சாலை அமைத்திருக்கிறார்கள். அதில் இன்னும் இருவகை மரவுரிகளை காணலாம்.

காலம் ஆக ஆக, வேறு சில முக்கியமான பொருள்களும் ஆடை செய்ய உபயோகம் ஆயின. இவை பட்டு, ரோமம், தோல், நார், பருத்தி என்பன.

சீன தேசம் என்றொரு தேசம் இருக்கிறது. அங்கேதான் பட்டு உற்பத்தியாயிற்று. பட்டு பூச்சி என்பது ஒரு விதப் பூச்சி. அது தன் உடலிலிருந்து வெண்மையான நூலை உண்டாக்குகிறது. இந்த நூலால் தனக்கு ஒரு கூடு அமைத்து, அக்கூட்டி

னுள் பூச்சி வாழ்கிறது. கூட்டை எடுத்து நூலாக நூற்கிறார்கள். இந்த நூல் மெதுவும், பளபளப்பும், உறுதியும் உடையது. இதுவே பட்டு.

பட்டு இப்போது நம் நாட்டிலும் உற்பத்தி ஆகிறது. இது மிகவும் விலை உயர்ந்தது. இக்காரணத்தால், இன்று செல்வத்துக்கும் ஆடம்பரத்துக்கும் இது அடையாளப் பொருளாக உள்ளது. நம் நாட்டில், கூறை நாடு, காஞ்சிபுரம், கொள்ளேகாலம் முதலிய நகரங்கள் பட்டு நெசவுக்குப் புகழ் பெற்றவை.

இரண்டாவது பொருள் ரோமம். ஆட்டு ரோமம் நெடுங்காலமாக உடை செய்யப் பயன்பட்டு வந்தது. ரோமத்தை கத்தரித்து நூலாக நூற்றுத் துணி நெய்வார்கள். ரோமத்தால் ஆன துணியைக் கம்பளி என்

போம். இது நம் உடம்பில் கடுங் குளிர் தாக்காதபடி காக்க வல்லது. ஐரோப்பாக் கண்டத்தில் பெரும் பகுதி கடுமையான குளிருள்ள நாடு. அங் கெல்லாம் கம்பளிதான் மக்களுக்குச் சாதாரண உடை. வட இந்தியாவில், டில்லி, காசி, கயை முதலான இடங் களில் கார்த்திகை, மார்கழி, தை மாதங் களில் குளிர் மிகவும் அதிகம். அப் போது எல்லா மக்களும் கம்பளி உடையே உடுப்பார்கள்.

நம் நாட்டில் காஷ்மீரத்துச் சால்வை என்பது நெடுங்காலமாய் புகழ் பெற்ற கம்பளி. கம்பளி நெசவுக்குப் பிரசித்தமானது கான்பூர் நகரம். தமிழ் நாட்டில் கம்பளி வேலை இல்லை.

மற்றோர் உடை, தோல். பூமியின் மத்திய பாகத்தை விட்டு நெடுந்தூரம்

வடக்கே சென்ருல், அங்கே குளிர் மிகுந்த பகுதியைக் காணலாம். சீத்ளப் பிரதேசம் என்று இதைச் சொல் வோம். வருஷத்தில் பெரும் பகுதி இங்கு தரையெல்லாம் பனிக்கட்டி விழுந்து உறைந்து கெட்டியாகி இருக்கும். நீரெல்லாம் உறைந்து போயிருக்கும். புல் பூண்டுகள் கூட அங்கு முளைப்பது அருமை. எந்த உணவும் கிடைப்பது கடினம். அங்கு வாழும் மக்கள் அந்தப் பிர தேசத்தில் உள்ள ஒரு மானின் இறைச்சியையும் கடல் மீனையுமே உணவாய்க் கொள்வார்கள். அந்த மானின் தோலும் மீனின் தோலுமே அவர்களுக்கு உடை. அத்தோல்தான் கடுங்குளிரைத் தாங்கவல்லது.

பழங்காலத்தில் நம் நாட்டில் கூட மான்தோல் புலித்தோல் முதலியன

ஆடையாக வழங்கின. குறவர் இன்றும் நரித்தோலை உபயோகிக் கிறார்கள்.

நான்காவது பொருள் நார். வங்காளத்தில் பயிராகிற சணலை நாம் பார்த்திருக்கிறோம். கோணிப்பைகள் யாவும் சணலால் செய்தவை. பிளாக்ஸ் என்பது சணல் போன்ற நார் தருகிற மற்றொரு செடி. இது பல ஆயிரம் வருஷங்களாக எகிப்து நாட்டில் பயிராகிறது. இதன் நாரை எடுத்து, நூலாக நூற்றுத் துணி நெய்கிறார் கள். இந்த நார்த் துணிதான் அநேக நாடுகளில் ஆடை செய்யப் பயன் பட்டது.

நம் நாட்டில், வைதிகமான பாட்டி மார் உடுத்துவது நார்மடி என்று வழங்கும் புடைவை. இதுவும் ஒரு வகை நாரால் ஆனது. வாழைநார்

இப்படி நெய்ய உதவும். ஆனால் அந்நார் பலமில்லாதது.

இவை எல்லாவற்றையும் விட, உடை தயாரிக்க அதிகமாய்ப் பயன் படுவது பருத்தி. ஆதியில் பருத்தி இந்திய நாட்டில்தான் உண்டாயிற்று. பருத்தி என்பது ஒரு சிறு செடி. கரிசல் மண்ணில் இது நன்றாய்ப் பயிராகும். முளைத்த சில மாதங்களில் பூத்துக் காய்க்கும். காய் முற்றியதும் வெடிக் கிறது. உள்ளே விதைகள் இருக்கும். விதையைச் சூழ்ந்து மேன்மையான பஞ்சு இருக்கிறது. இதை எடுத்து, நூலாக நூற்றுத்தான் நாம் துணி நெய்கிறோம். பல ஆயிரம் வருடங் களாக, பருத்தி நூல் துணி இந்தியா வில் நெய்யப் பெற்று வந்தது. இங்கிருந்து இது மற்ற நாடுகளுக் கும் போயிற்று.

வெள்ளைக்காரர்களுக்கு நெடு நாள் முன்னமே பருத்திச் செடி தெரியாது. அவர்களில் ஒருவர் பருத்தியைப்பற்றி "இந்தியாவில் ஒரு செடி இருக்கிறது. அச்செடி ஆட்டு ரோமம் போன்ற ரோமம் காய்க்கிறது. இந்த ரோமத்தால் அங்கு துணி நெய்கிறார்கள்" என்று எழுதியிருக்கிறார்.

தமிழ் நாட்டில் திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய இரண்டு ஜில்லாக்களிலும் பருத்தி அதிகமாக விளைகிறது.

முன்னமே இந்திய நாட்டில் பருத்தித் துணி ஏராளமாய்த் தயாராயிற்று இது மிகவும் மெல்லியதாய் இருந்த்து. இதற்கு ஆசைப்பட்டு, இதைத் தங்கள் நாட்டில் கொண்டு போய் வியாபாரம் செய்யவேண்டி,

சில வெள்ளைக்காரர்கள் சுமார் முந்நூறு வருஷங்களுக்கு முன் இங்கு வந்தார்கள். அச்சமயம் இங்கு ஏராளமான பருத்தி பயிராயிற்று. நம் முன்னோர் தாங்களே கையால் பருத்தி அரைத்து, பஞ்சு வெட்டி, நூல் நூற்று துணி நெய்வார்கள்.

பிறகு, வெள்ளைக்காரர் நாடாகிய இங்கிலாந்தில் சில புது யந்திரங்கள் செய்தார்கள். பருத்தி அரைத்தல், நூற்றல், நெய்தல் முதலான வேலைகளை இவை வேகமாய்ச் செய்யும். நீராவியின் சக்தியால் இந்த யந்திரங்கள் ஓடின. கஷ்டப்பட்டு பல மனிதர்கள் பல நாள் செய்யும் வேலையை எளிதாய் ஒரு யந்திரம் ஒரே நாளில் செய்து முடிக்கும். ஆகவே, யந்திர வேலைக்கு அதிகப்பஞ்சு தேவையாயிருந்தது.

அப்போது இந்தியாவுக்கு வந்திருந்த ஆங்கில வியாபாரிகளும், இந்தியாவில் ஆண்ட ஆங்கில அரசாங்கமும், இங்கு விளைந்த பஞ்சை யெல்லாம் கப்பலேற்றிக் கொண்டு போனார்கள். இதன் பயனால் நம் சகோதரர்கள் தாங்கள் செய்து வந்த நூற்றல் நெசவுத் தொழில்களை மறந்துவிட்டார்கள். நாட்டில் இத் தொழில் அழிந்தே போயிற்று. இதனால் நாட்டில் லட்சக்கணக்கான நெசவாளர்களுக்கு வேலை இல்லை. வருவாயும் இல்லை.

தவிர, நம் பஞ்சைக் கொண்டு போய் யந்திரத்தில் நூற்று நெய்த பின், திரும்ப நம்மிடமே கொண்டு வந்து அதிக விலைக்கு விற்றார்கள். இப்படி இரண்டு விதத்திலும் நம் நாடு செல்வம் இழந்தது. ஒரு போதும்

கண்டிராத வறுமை இங்கு குடி கொண்டது.

நம் நாடு கிராமம் மிகுந்த நாடு. நம் மக்களில் பெரும் பகுதி கிராமத்தில் வாழ்கிறார்கள். இவர்கள் தொழில் பயிர்த்தொழில். நன் செய்யில் வேலை செய்பவர்களுக்கு வருடத்தில் நான்கு மாதம் வேலை இல்லை. மற்றவர்களுக்கும் ஓய்வு அதிகம். இப்போது ஓய்ந்த நேரத்தில் இவர்கள் நேரமெல்லாம் சோம்பலிலே கழிகிறது. இது நாட்டுக்கே பெரிய வறுமையை விளைவிக்கிறது.

இந்த ஓய்வு நேரத்தில் கிராம மக்கள் பயனுள்ள முக்கியமான ஒரு தொழிலை செய்வது நல்லது. கையால் நூற்கவும், நெய்யவும் பழகுதல் நல்லது. நூற்பதற்கான கருவி ராட்டை, முற்காலத்தில் வீடு தோறும்

உள்ள பெண்கள், முக்கியமாக வேலை செய்யப் பலமில்லாத கிழவிகள் ராட்டையில் நூற்று வந்தார்கள். யாரும் ஒரு மாதத்தில் திறமையாக நூற்றுவிடலாம். கிராமத் தச்சர் களால் ராட்டை செய்ய முடியும்.

கிராமவாசி தம் துணிக்காக நூற்றால் போதும். நூலை விற்க வேண்டாம். லாபத்தை எண்ணி நூற் கவும் வேண்டாம். உழவு வேலையை முடித்து ஓய்ந்திருக்கும் கொஞ்ச நேரத்தில் நூற்றால் போதும். வெற்றிலை பாக்கு மென்றுகொண்டே நூற்கலாம். பலர் கூட்டமாய் உட் கார்ந்து, ஊர் விவகாரம் பேசிக் கொண்டே நூற்கலாம்.

குடும்பத்தில் எல்லோருக்கும் வேண்டிய துணிக்கான நூல் அவ ரவர் நூற்பது நல்லது. நூற்ற

நாலே ஒரு அடி நீளம் அகலமுள்ள விசனத்தில் சுற்றுவார்கள். நான்கு மூலேயிலுள்ள நான்கு முனே யில் நூல் சுற்றி வரும்போது, ஒரு சுற்று 4 அடி யாகும். 80 சுற்று ஒரு கண்ணி, 8 கண்ணி 1 சிட்டம். சுமா ராய் நூ ற் ப வ ர் அரை மணியில் 2 கண்ணி நூற்கமுடியும். ஒழிந்த நேரமெல்லாம் நூற்ருல், ஒரு நாளேக் குக் குறைந்த பட்சம் 1 மணி நூற்க லாம். அதாவது 4 கண்ணி நூல் அரைச் சிட்டம். மாதம் 15 சிட்டம். வருடத்தில் 180 சிட்டம்.

ஒரு சதுர கெஜம் துணி நெய்ய 4 சிட்டம் ஆகும். ஆகவே இவருக்கு வருடம் 45 சதுர கெஜம் துணி ஆகிறது. இதில், 4 வேட்டியும், 2 துண்டும், 2 சட்டையும், அவருக் குக் கிடைப்பதோடு, அவர் மனேவிக்கு

2 புடவையும், 4 ரவிக்கைத் துணி யும் கிடைக்கும்.

இது பணச் செலவில்லாமலே வருகிற லாபம். ஏழைக்கு இது எவ் வளவு பெரிய நன்மை? வீட்டில் பெண்களும் சேர்ந்து, ஓய்ந்தபோது நூற்றால், குழந்தைகள் துணி யெல் லாம் எளிதில் தயாராகிவிடும். பணத் தைக் கொண்டுபோய்க் கடைக்கார னிடம் கொடுத்து அதிக விலைக்குத் துணி வாங்கும் கஷ்டம் இல்லை.

உண்மையான சுதந்தரம் என் பது, அவரவர் தமக்கு வேண்டியதை இயன்ற அளவு தாமே தயார் செய்து கொள்வதுதான். கிராமவாசிகள் பெரும்பாலும் தங்கள் உணவைத் தாங்களே தேடிக்கொள்ளுகிறார்கள் அவர்களுக்கும் நன்மை, நாட்டுக்கும் செல்வம் பெருகும்.

---

C.C.P. Works, Ltd., Madras.

# தென்னிந்திய
# முதியோர்க் கல்விக் கூட்டுறவு
# பதிப்பகம் லிமிடெட்,

சென்னை 1.

● மக்களுக்காக, மக்களால் ஆக்கப்பட்ட முதியோர் கல்வி இயக்கத்தின் வெளியீடுகளை ஏழைமக்கள் அடையக் கூடிய எளிய விலையில் வெளியிட, நம் மாகாணத்தின் ஒரே ஒரு கூட்டுறவு பதிப்பகம்.

● ● அரசாங்கத்தின் முதியோர் கல்வி இயக்கத்தின் வெளியீடுகளை வெளியிடும் பதிப்பகம்.

● ● பாலர், முதியோர் கல்விப் பிரசுரங்கள், உபகரணங்கள் தயார் செய்து பதிப்பிக்கும் பதிப்பகம்.

● மக்கள் ஆதரவே எங்கள்
உழைப்புக்குச் செழிப்பும்,
வெற்றியும்

●

● முன் பணம் கட்டக்கூடிய, ஜில்லா, தாலுக்கா, பிர்கா விற்பனையாளர்கள் தேவை. தயவு செய்து விபரங்களுக்கு எழுதவும்.

---

தலைமை காரியாலயம்:

99, கிடங்கு தெரு, சென்னை 1.

போன்: 3879.